12வது பதினெண்சித்தர் பீடாதிபதி, ஞாலகுரு
<u>சித்தர் அரசயோகிக் கருவூறூர் அவர்கள் அருளியது</u>

# அருளுலக இருளகற்றும் பணி



**இந்து மதத் தந்தை, இந்து வேத நாயகம்,**
**12வது பதினெண்சித்தர் பீடாதிபதி, மடாதிபதி,**
**ஞானாச்சாரியார்,**
**ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூறூர்.**
(சென்னை செங்குன்றத்தை அடுத்த காரனோடையில் சமாது கொண்டருளுபவர்)

மெய்யான இந்துமத ஆண்டு 43,73,119 **பங்குனி** மாதம்.

## இந்து இலக்கியக் கழகம்

காணிக்கை: ரூ 10/-

ஓம் குருவே போற்றி! ஓம் குரு குரு வாழ்க! ஓம் குருவே எல்லாம்!

# <u>உள்ளுறை</u>

1. "அருளுலக இருளகற்றும் பணி அழைப்புத் திருவோலை" - 1985இல் அச்சிடப்பட்டு செல்லரித்த நிலையில் இருக்கும் புத்தகத்தின் நகல்.
2. "பதினெண்சித்தர் மடம்" - விளக்கக் கட்டுரையின் நகல்.
3. "தஞ்சைப் பெரிய கோயிலைக் கட்டிய சித்தர் கருவூரூரின் குருபாரம்பரியம்" - 1988இல் அச்சிடப்பட்ட அறிவிக்கையின் நகல்.
4. "சமத்துவ சகோதரத் தத்துவப் பொதுவுடைமை கூட்டுறவுச் சமுதாயம் அமைப்போம் வாரீர்!" - சித்தரடியார் திரு ஏ.இரவி அவர்கள் எழுதிய கவிதை.


---

"... ... யாம் எதையும் நிதானமாக, சமாதானமாக, கருத்துப் பரிமாற்றத்தின் மூலம் அன்பு வழியில், அற வழியில், அருள் வழியில், ஆரவாரமின்றி அமைதியாகச் செய்திட முயலுகிறோம். ஆனால், தமிழினத் துரோகிகளும், விரோதிகளும் சாதுரியமாகச் சிக்கல்களையும், சீற்றங்களையும் வளர்க்கிறார்கள். இவற்றை முறியடிக்க வேண்டுமென்றால் 'தனித்தமிழ் இயக்கம்', 'தமிழ்மொழி விடுதலை இயக்கம்', 'தமிழின விடுதலை இயக்கம்', 'தமிழ்ப் பண்பாட்டு வளவளர்ச்சி இயக்கம்', 'தமிழிலக்கிய மறுமலர்ச்சி இயக்கம்', 'தமிழ்ச் சமய விழிச்சி இயக்கம்', 'தமிழ்ச் சமுதாய ஒற்றுமை வளர்ச்சி இயக்கம்', 'தமிழின அரசியல் செழிச்சி இயக்கம்', ...... எனப் பல இயக்கங்கள் பலரின் தலைமையில் அருகு போல் தோன்றி ஆல்போல் தழைத்திடல் வேண்டும். ... ..."

*//குருதேவர் எழுதியருளிய 'பதினெண்சித்தர் பீடாதிபதியின் பதினெட்டு அருளாட்சி ஆணைகள்' என்ற நூலின் முன்னுரையில் உள்ள வாசகங்கள்.//*

# <u>இந்து மறுமலர்ச்சி இயக்கம்</u>

<u>**(பண்பாட்டுக் கழகம்)** தோற்றம்: கி.பி.1772</u>



மெய்ஞ்ஞானக் கொடி



11வது பதினெண்சித்தர் பீடாதிபதி

# <u>அருளுலக இருளகற்றும் பணி அழைப்புத் திருவோலை</u>

***<u>அருளுபவர்:</u>*** **இந்துமதத் தந்தை, அரசயோகி, அண்டபேரண்ட ஆதிசத்திகள் சன்னிதானம், ஞாஞச்சாரியார், 12வது பதினெண்சித்தர் பீடாதிபதி, குருமகாசன்னிதானம் ஞாலகுரு சித்தர் கருவூரூர்.**

## <u>வேண்டுகோள்</u>

**‘இந்துமத அருட்பேரரசு மீண்டும் தமிழக - தென்னிந்திய - இந்திய - உலகளாவிய அளவில் தழைக்க வேண்டுமேயானல் முதலில் துணிந்து குருவாசகத்தையும், திருவாசகத்தையும் மெல்ல மெல்ல தெள்ளத் தெளிவாக மக்களிடம் விளக்கிக் கூறிப் பரப்பிடல் வேண்டும். இவை திருக்குறள், திருமந்திறம் போலவும், மாணிக்கவாசகரின் திருவாசகம், மூவரின் தேவாரம் போலவும், ...**

**பொது மக்களிடையில் செல்வாக்குப் பெற வேண்டும். அப்பொழுதுதான் சிதைவுற்றுத் தன்மானம் இழந்தும், தன்னம்பிக்கை நலிந்தும், ஒற்றுமை குன்றியும், மொழி இன நாட்டுப் பற்று செழுமை பெறுமலும் அடிமைப்பட்டுக் கிடக்கும் தமிழினத்தை மலர்ச்சியும், வளர்ச்சியும், செழுச்சியும், ஆட்சி மீட்சியும் பெறச் செய்ய முடியும்'**

- என்ற **11வது பதினெண்சித்தர் பீடாதிபதி**யின் குருவாசகத்தையே இன்றைய நிலையில் தமிழினப் பொதுமக்களுக்கு வேண்டுகோளாக விடுக்கிறோம். மேலும், கருவாசகம், குருவாசகம், தருவாசகம், திருவாசகம், அருள்வாசகம், மருள்வாசகம் முதலிய நூல்கள் அச்சேறி வெளிவர பொருளுதவி செய்யுமாறும் வேண்டுகின்றோம்.

# <u>அருளுலக இருளகற்றும் பணி அழைப்புத் திருவோலை</u>

பொருளுலக முறைகேடுகளும், குறைபாடுகளும், குறைகளும், தேக்கங்களும், வீக்கங்களும், பதுக்கல்களும், ஒதுக்கல்களும், தனிமனித கொள்ளைகளும், ஏதேச்சதிகாரங்களும், வெறிகளும், நெறிமுறைகளும், ... அருளுலக இருளகற்றும் பணியால்தான் உடனடியாகத் தடுக்கப்பட்டு, ஒடுக்கப்பட்டு, அறவே எடுக்கப்பட்டிடும். <u>இப்பணி புதிய அரசியல் தோற்ற ஏற்ற மாற்ற வேறுபாடுகளால் மட்டுமே சாதிக்கப்படும் என்பது தவறு! தவறு!! தவறு!!!</u> மாபெரும் தவறு!

தனிமனித வாழ்வைச் செப்பனிடும் சமய விழிச்சிமிகு செழிச்சியும்; குடும்ப வாழ்வை வள வலிவுமிகு வடிவமைப்புச் செய்யும் சமுதாய எழுச்சி நிறை செழுச்சியும்தான் பொருளுலகத் தீமைகள் அனைத்தையும் மாய்த்துத் தீய்த்து அழித்து ஒழிக்கும். அதற்குத்தான் பதினெண்சித்தர் பீடாதிபதிகள் இம்மண்ணுலகில் (48) நாற்பத்தெட்டு முறை தோன்றிச்

**“சித்தர் நெறி”** எனும் **‘இந்துமதத் தத்துவ’த்தால்** (The True Indhuism is the Siddha Philosophy; and it is the pre-Aryan vedic culture - ஆரிய வேத நெறிக்கு முந்தியதே சித்தர் நெறி எனும் உண்மையான இந்துமதம்) **‘முழுமையான பண்பாட்டுப் புரட்சி’**யினைச் செய்து பகுத்தறிவுநிறை சமுதாய அடிப்படை மாற்றங்களை (The Radical and a Fundamental Social Change) உருவாக்கிடும் செயல்திட்டம் அருதிக்காலத்திலேயே (43,73,085) நாற்பத்து மூன்று இலட்சத்து எழுபத்து மூவாயிரத்து எண்பத்தைந்து ஆண்டுகளுக்கு முன்னரே முதல் நிலமான ‘இளமுறியாக் கண்ட’த்தில் (The Kumari Continent - குமரிக் கண்டம்) அண்டபேரண்டமாளும் பதினெண்சித்தர்களின் தாய்மொழியான **தமிழ்மொழியில் இந்துமதம் என்ற பெயரால் வழங்கப் பட்டது**.

இந்த வரலாற்றுப் பேருண்மையும், தத்துவமும், சித்தாந்தமும், மரபும், ஒழுகலாறும், சட்டதிட்டக் கட்டுப்பாடும், ... மூன்று உகங்களாகத் தமிழினத்தின் அகப் பண்பாடாகவும், புற நாகரிகமாகவும் வாழ்ந்து வளர்ந்து ஆட்சி புரிந்து மாட்சிமை பெற்றன. ஆனால், கலியுகத்தில் இந்துமதத்தின் கருவறையான, பிறப்பிடமான, இருப்பிடமான, தொட்டிலான, உலைக்கூடமான, ... இந்தியாவுக்குள் புகுந்த ஆரியர்கள் அனைத்தையும் சிதைத்துச் சீரழித்துச் செயலற்றவையாக ஆக்கி; அனைத்தையும், அனைவரையும் அடிமையாக்கி மிடிமையில் ஆழ்த்தி விட்டனர்.

அதனின்றும் இந்துமதம் விடுபட்டால்தான் இந்தியாவின் அனைத்துப் பொருளுலகக் கேடுகளும், கேவலங்களும், அவலங்களும் மாற்றப் பட்டிட முடியும். இதற்கு **இந்துமதம்தான் இம்மண்ணுலகின் மதங்களுக்குத் தாய்** என்ற பேருண்மை விளக்கப்பட்டு ‘உலக ஆன்மநேய ஒருமைப்பாடு’ம், ‘உலகச் சமத்துவச் சகோதரத் தத்துவப் பொதுவுடைமைக் கூட்டுறவுச் சமுதாய’மும், ‘உலக மத இணைப்பும்,

<u>பிணைப்பும், ஒற்றுமையும் நிலைக்கும் மதச் சமத்துவமும்</u>', ... உருவாக்கப் பட்டேயாக வேண்டும்.

இவற்றிற்காக,

(1) இந்திய மண்ணில் தோன்றிய மதங்கள் அனைத்தும் சித்தர்களின் இந்துமதத்தின் கிளைகளே என்ற பேருண்மையினைச் சங்க இலக்கியங்கள், ஆழ்வாராதிகளின் பாசுரங்கள், நாயன்மார்களின் அருட்பாக்கள், திருமூலரின் தத்துவங்கள், ... முதலியவற்றின் சாரத்தைச் சமசுக்கிருத மொழியில் அத்வைதமாக வெளியிட்ட தென்பாண்டித் தமிழர் ஞானசித்தர், இந்துமதம் காத்த அருவுருவ சித்தியார் **'மந்திற சித்தி நாயகம் ஆதிசங்கரர்'**;



(2) *'மக்கள் தொண்டே மகேசன் தொண்டு'* என்ற நவநாத சித்தர் கொள்கையின் விளக்கமாகப் பாட்டாளிப் பாமர மக்களின் நல்வாழ்வுக்காகப் பொதுவுடைமைத் தத்துவம் என்ற சித்தாந்தத்தை உருவாக்கிய *'மனித நல உரிமை பேணிய பேரருளாளன்', 'வறுமை நோய்க்கு மருந்து கண்டுபிடித்த விஞ்ஞானி', 'தத்துவ வித்தகர்',* **'நவநாத சித்தர் கார்ல் மார்க்சு'**;



(3) **<u>மதவழிப் புரட்சியால்தான்;</u>** இந்திய இனங்களை ஒற்றுமைப்படுத்த முடியும், தன்மான உணர்வுற்று விழிச்சி பெறச் செய்ய முடியும், தன்னம்பிக்கை உள்ள கிளர்ச்சிகளுக்குரிய எழிச்சி பெறச் செய்ய முடியும், உரமிகு வீரமுற்று உரிமைக்குப் போராடும் செழிச்சி பெறச் செய்ய முடியும், ..... என்ற பேருண்மைகளை மெய்யாக்கிக் காட்டிய **'போத்தர் கரம்சந்த் மோகன்லால் காந்தி'**;



(4) இந்து மதத்தின் மூலவர்களாக, காவலர்களாக, நாற்றங்கால் பயிராக உள்ள தமிழினத்தின் வீழ்ச்சியும், தாழ்ச்சியும் ஆரியச் சூழ்ச்சி அண்டப் புளுகுகளாக, ஆபாசக் கதைகளாக, அநாகரிகக் கற்பனைகளாக இருப்பதைக் கடுமையான நாத்திக வாதத்தால்தான் வெல்ல முடியும், அப்பொழுதுதான் தமிழன் மொழியுணர்ச்சி, இன உணர்ச்சி, நாட்டுணர்ச்சி, மொழிப்பற்று, நாட்டுப்பற்று, ... முதலியன பெற்று ஒற்றுமைப்பட்டு மதவழிச் சிந்தனையால் உரிமைக்கும் பெருமைக்கும் போராடுவான், ... என்ற பேருண்மைகளைக் கண்டறிந்து செயலாக்கும் முயற்சியில் ஈடுபட்ட தன்மானப் பயிர் தழைக்கப் பெய்த அறிவு மழை, மடமை இருளகற்றத் தோன்றிய பகுத்தறிவுப் பகலவன், சிறைக்கஞ்சாச் சிங்கம், தமிழின நலம் காக்கப் போரிட்ட வெண்தாடி வேந்தன், புதுமைச் சமுதாயம் படைக்க முற்பட்ட சிந்தனைச் சிற்பி, இந்துமத வழிபடுநிலையினரையே சொல்லால் அடித்துப் பூசை செய்த **'சொல்லடி நாயனார், தமிழினத் தலைவர், பெரியார் ஈ.வெ.ரா.'** ....



ஆகிய **அறிவுலக அருளுலக நால்வரையும்;** தமிழ்மொழி, இனம், நாடு எனும் மூன்றும் தூய்மை, வாய்மை, உய்வு, உரிமை, பெருமை பெறுவதற்காக **'சமயக் குரவர்களாக'**, **'சந்தானக் குரவர்களாக'** ஏற்றுப் போற்றிப் பேணி மதவழிச் சமுதாய மாற்றப் பணியினைத் துவக்கியுள்ளார் இந்துமதத் தந்தை, ஞானாச்சாரியார், அரசயோகி, அண்டபேரண்ட ஆதிசத்திகள் சன்னிதானம், இராசிவட்ட நிறைவுடையார், ஆத்தாள் அமளிகை, கொற்றவை இருக்கை, பராசத்தி திருவடி, பன்னிரண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதி, குருமகா சன்னிதானம், ஞானத்தந்தை,



தமிழினத் தலைவர், குருதேவர், **ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரார் அவர்கள்.**

தமிழர்களே! உங்களுடைய இனத்தின் குரு! மொழியின் கரு! பண்பாட்டின் தரு! உரிமை வாழ்வின் திரு! ..... நெடிய இடைவெளிக்குப் பிறகு உங்களைத் தன்னுணர்வும், நம்பிக்கையும், ஒற்றுமையும் பெற்று உரிமை வாழ்வு பெற்றிடத் தயாரிக்கப் புறப்பட்டிருக்கிறார்! புரிந்து செயலுக்கு வாருங்கள்! வாருங்கள்!! வாருங்கள்!!!

அன்றாடம் 108 முறை ஓதி அகத்தை வளப்படுத்தும் தமிழ்மொழிக் **<u>காயந்திரி மந்தரம்</u>** குருவழி பெற்று பயிற்சி செய்ய முயலுக! முயலுக! முயலுக!

அருளுலகில் உலக முதல் மொழியான தமிழ்மொழியின் **<u>அருட்சினை மந்திறம்</u>** மூலம் உங்களை அனைத்து மத வழிபடு மூலநிலையினரோடும் அறிமுகம் செய்யக் குருவழி பயிலுக! பயிலுக! பயிலுக!

பொருளுலகில் உடம்பின் வலிவும், பொலிவும், வளமும் ஓம்பிடப் பதினெண்சித்தர்கள் 43,73,085 ஆண்டுகட்கு முன் பைந்தமிழில் வழங்கிய அமுதம் நிறை **<u>ஓகாசன யோகாசன மந்திறங்களும்,</u> உடற்பயிற்சிகளும் சேவலோன் கலைகளாக** (The Shaolin Arts => முருகப் பெருமான் தோற்றுவித்த வீரக் கலைகள் Martial Arts) குருவால் இட்டும் தொட்டும் சுட்டியும் விளக்கப் பட்டுக் கற்றிடுக! கற்றிடுக! கற்றிடுக! நோற்றிடுக! நோற்றிடுக! நோற்றிடுக!

வீட்டுக்கு ஒருவராவது சித்தர்நெறிச் செல்வங்களைப் பெற்றுத் தமிழினத்தின் வறுமைகள்! இல்லாமைகள்! இயலாமைகள்! கூலிநிலைகள்! விரோதநிலைகள்! பழிநிலைகள்! இழிநிலைகள்! அழிநிலைகள்! ஒழிநிலைகள்! ... எனும் அவலங்களையும், கேவலங்களையும் அகற்றும் பணியில்

துணிவோடும், பணிவோடும், கனிவோடும் அணி சேர்ந்து செயல்பட வாரீர்! வாரீர்!! வாரீர்!!!

அனைத்துத் துறைகளிலும் எண்ணப் புரட்சியும், கருத்துப் புரட்சியும் மலர்ச்சி பெறச் சிந்தனைப் புரட்சி செய்யும் குருமகா சன்னிதானம் ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூறாரிடம் ஐயங்களைப் போக்கிக் கொள்ளலாம்! அருட்கணிப்புக்களைப் பெறலாம்! அருளுரை! அறிவுரை! அருளார்ந்த அறிவுரை! அறிவார்ந்த அருளுரை! எனும் நான்கினையும் அனாதி காலம் தொட்டு வளர்ந்து வந்த குருபாணியாகப் பெறலாம்! அருளை அனுபவப் பொருளாக அடையும் வழிகளைத் தெரியலாம்! புரியலாம்! வருக! வருக! வருக!

## அருளூறு காயந்திரி மந்தரம்

**"ஓம் பூர்வபுலன்கள் சுவையாகுக!**
**தத்துவ வித்துக்கள் அரணுகுக!**
**பாரின்கோ தேவர் வசிக்கும் தீ மகிழூட்டும்!**
**தீயே யோகப் பரஞ்சோதி யாகும்!"**

இதுவே காயந்திரி மந்தரம் (காயம் = உடல்; திரி = திரியாமல், மாறுமல்) ஆகும்.

இம் மந்தரத்தை நாள்தோறும் காலையிலும், மாலையிலும் 108 முறை கூற வேண்டும். அவ்வாறு ஓதத் துவங்குவதற்கு முன்பும், பின்பும் கீழ்க்கண்ட வாசகங்களைக் கூறி முடிக்க வேண்டும்.

**'ஓம் நமச்சிவாய பராசத்தி சிவாயநம**
**ஓம் சிவாயநம பராசத்தி நமச்சிவாய**
**ஓம் சிவாவாசி! ஓம் சிவாவாசி! ஓம் சிவாவாசி!**
**ஓம் சிவாவாசி! ஓம் சிவாவாசி! ஓம் சிவாவாசி!**
**ஓம் சிவவசி! ஓம் சிவவசி! ஓம் சிவவசி!**
**ஓம் சிவவசி! ஓம் சிவவசி! ஓம் சிவவசி!**

**ஓம் உண்டங்களே! பிண்டங்களே!**
**உயிரினங்களே! பயிரினங்களே!**
**அண்டங்களே! பேரண்டங்களே!**
**அண்டபேரண்டங்களே!**
**விழிச்சி கொள்க! எழிச்சி கொள்க! செழிச்சி பெறுக!**
**யாமே அனைத்துமாக உதவுக!**
**காயந்திரி மந்தரம் கூறுகிறேன்;**
**பயனாகட்டும்! சுவையாகட்டும்!**
**முற்பிறப்பும், மறுபிறப்பும் இப்பிறப்பிலேயே நிறைவாகட்டும்!**
**ஆவி, ஆன்மா, ஆருயிர் மூன்றும் ஒன்றாகட்டும்!**
**அனைத்துக்கும் தாயாக! ஆயாவாக!**
**அப்பனாக! தாத்தாவாக! இருப்பவர்களே!**
**ஏற்றிடுக! ஏற்றிடுக! ஏற்றிடுக! ஏற்றிடுக!**
**காத்திடுக! காத்திடுக! காத்திடுக! காத்திடுக!'**

# அருட்சினை மந்திரம்

*பதினெண்சித்தர்கள் **'அருட்சினை மந்திரம்'** அருள் + சினையாகும் => அருள் கருவாகி வளர்ந்து பயன் தரக் கூடிய மந்திரம் என்று குறிப்பது இம்மந்திரம்.*

**ஓம் பராசத்தி நமசிவாய போற்றி**
**ஓம் சித்தர்களே போற்றி**
**ஓம் அருவ உருவ அருவுருவச் சித்தியாளர்களே போற்றி**

**வானாகி மண்ணாகி வளியாகி ஒளியாகி**
**ஊனாகி உயிராகி உண்மையுமாய் இன்மையுமாய்**
**கோனாகி யான் எனதென்று அவரவரைக் கூத்தாட்டு**
**வானாகி நின்றாயே உனை வாழ்த்தி வணங்குகிறேன்.**
**எனேவாகி இன்னல் பல்லாற்றானும் உழல்பவர்க்கு**
**நானாகிய அடியேன் நலம் வேண்டுகிறேன்.**

தானுகவே தழல்தரு கொடுமைமிகு துயரமெல்லாம்
வீணுகி விலகியோடி ஒழியட்டும்.

ஓம் நசிநசி! ஓம் நசிநசி! ஓம் நசிநசி! ஓம் நசிநசி!
ஓம் மசிமசி! ஓம் மசிமசி! ஓம் மசிமசி! ஓம் மசிமசி!
ஓம் வசிவசி! ஓம் வசிவசி! ஓம் வசிவசி! ஓம் வசிவசி!
ஓம் சிவசிவ! ஓம் சிவசிவ! ஓம் சிவசிவ! ஓம் சிவசிவ!
ஓம் வாசிவாசி! ஓம் வாசிவாசி! ஓம் வாசிவாசி! ஓம் வாசிவாசி!
ஓம் சிவாசிவா! ஓம் சிவாசிவா! ஓம் சிவாசிவா! ஓம் சிவாசிவா!

ஓம் அம்மையப்பனே போற்றி!
ஓம் அருட்குருவே போற்றி!
ஓம் அன்புறு ஊற்றே போற்றி!
ஓம் இன்பச் சோலேயே போற்றி!
ஓம் சித்திச் சாலேயே போற்றி!
ஓம் முத்தி மன்றே போற்றி!

கற்பூரம் பாக்கு வெற்றிலே பழம் தேங்காய்
பக்குவமாய் பண்ணிய பலகாரங்கள் பலவும்
படைத்தேன் ஏற்றிடுக! ஏற்றிடுக! ஏற்றிடுக!
அனேத்தையும் காத்திடுக! காத்திடுக! காத்திடுக!
அருள் செழித்திடுக! செழித்திடுக! செழித்திடுக!
எங்கும் நலம்விளேக! நலம்விளேக! நலம்விளேக!
நான்மறையே, நான்முறையே, நானெறியே, நான்வேதமே,
வாழ்க! வாழ்க! வாழ்க! வாழ்க! வாழ்க!

பதினெண்சித்தர்கள் கருவறை உயிர்ப்பு, குடமுழுக்கு, பூசாவிதி, பூசாமுறை, குருமார் ஒழுக்கம், ஆகமம், மீமாம்சை, வேள்விமுறை, தவமுறை, ஞானமுறை, சித்திமுறை, ஓகமுறை, ஒளிவில் ஒடுக்கம் முதலிய நூல்களில் எல்லாரும் பயன்படுத்தித் திருவருட்பேறு பெறும் மந்திரம் என்று இம்மந்திரத்தைக்

**குறிக்கின்றூர்கள். சித்தரடியான்கள், சித்தரடியாள்கள், சித்தரடியார்கள் அனைவருக்கும் இம்மந்திறத்தை அன்றூடம் பூசையில் பயன்படுத்துமாறு திருமந்திற ஓலைநாயகம் ஓலை விடுக்குமாறு ஆணையிடப்படுகின்றூர். இம்மந்திறம் கருவறைகளையும், வெட்டவெளிக் கருவறைகளையும், வழிபாட்டு நிலையக் கருவறைகளையும்; தனிமனித உள்ளங்களையும், இல்லங்களையும் உயிர்ப்பிக்கும்.**

**ஓம் திருச்சிற்றம்பலம் ஓம்!**

**ஓம் சத்தி வாழ்க! நாமாகுக, நமதேயாகுக, நமக!**
**ஓம் இறை வாழ்க! நாமாகுக, நமதேயாகுக, நமக!**
**ஓம் ஈசா வாழ்க! நாமாகுக, நமதேயாகுக, நமக!**
**ஓம் கடவுள் வாழ்க! நாமாகுக, நமதேயாகுக, நமக!**
**ஓம் ஆண்டவர் வாழ்க! நாமாகுக, நமதேயாகுக, நமக!**
**ஓம் *எல்லா வாழ்க! நாமாகுக, நமதேயாகுக, நமக!**

***[*சூரியனைக் குறிக்கும் எல்லா எனும் சொல்லே அல்லா எனத் திரிந்தது]***

**ஓம் தெய்வம் வாழ்க! நாமாகுக, நமதேயாகுக, நமக!**
**ஓம் தேவர் வாழ்க! நாமாகுக, நமதேயாகுக, நமக!**
**ஓம் தேவி வாழ்க! நாமாகுக, நமதேயாகுக, நமக!**
**ஓம் அணங்கு வாழ்க! நாமாகுக, நமதேயாகுக, நமக!**
**ஓம் தேவதை வாழ்க! நாமாகுக, நமதேயாகுக, நமக!**
**ஓம் அம்மன் வாழ்க! நாமாகுக, நமதேயாகுக, நமக!**
**ஓம் இருடி வாழ்க! நாமாகுக, நமதேயாகுக, நமக!**
**ஓம் முனி வாழ்க! நாமாகுக, நமதேயாகுக, நமக!**
**ஓம் கரு வாழ்க! நாமாகுக, நமதேயாகுக, நமக!**
**ஓம் குரு வாழ்க! நாமாகுக, நமதேயாகுக, நமக!**

**ஓம் தரு வாழ்க! நாமாகுக, நமதேயாகுக, நமக!**
**ஓம் திரு வாழ்க! நாமாகுக, நமதேயாகுக, நமக!**
**ஓம் பிண்டங்கள் வாழ்க! நாமாகுக, நமதேயாகுக, நமக!**
**ஓம் அண்டங்கள் வாழ்க! நாமாகுக, நமதேயாகுக, நமக!**
**ஓம் பேரண்டங்கள் வாழ்க! நாமாகுக, நமதேயாகுக, நமக!**
**ஓம் அண்டபேரண்டங்கள் வாழ்க! நாமாகுக, நமதேயாகுக, நமக!**
**ஓம் அருவங்கள் வாழ்க! நாமாகுக, நமதேயாகுக, நமக!**
**ஓம் உருவங்கள் வாழ்க! நாமாகுக, நமதேயாகுக, நமக!**
**ஓம் அருவுருவங்கள் வாழ்க! நாமாகுக, நமதேயாகுக, நமக!**
**ஓம் உருவஅருவங்கள் வாழ்க! நாமாகுக, நமதேயாகுக, நமக!**
**ஓம் கணங்கள் வாழ்க! நாமாகுக, நமதேயாகுக, நமக!**

**வாழ்க ஓம்! வளர்க ஓம்!**
**வலிவுறுக ஓம்! பொலிவுறுக ஓம்!**
**வளமுறுக ஓம்! நலமுறுக ஓம்!**
**யாவும் நன்மையாகட்டும்! பயனுகட்டும்!**
***ஓம்! ஓம்! ஓம்! ஓம்! ஓம்!**

| | | |
|---|---|---|
| **ஓம் சிவ!** | **ஓம் சிவ!** | **ஓம் சிவ!** |
| **ஓம் சிவசத்தி ஓம்!** | **ஓம் சிவசத்தி ஓம்!** | **ஓம் சிவசத்தி ஓம்!** |
| **ஓம் பராசத்தி ஓம்!** | **ஓம் பராசத்தி ஓம்!** | **ஓம் பராசத்தி ஓம்!** |
| **ஓம் நவசத்தி ஓம்!** | **ஓம் நவசத்தி ஓம்!** | **ஓம் நவசத்தி ஓம்!** |
| **ஓம் சத்தி ஓம்!** | **ஓம் சத்தி ஓம்!** | **ஓம் சத்தி ஓம்!** |

**<u>*குறிப்பு:</u>** *ஐந்து தடவைகள் ஓம் கூறுவது போலவே பின்னுல் வரும் வாசகங்களையும் ஐந்து தடவைகள் கூறிடலாம்.*

# <u>கோவில் காப்பாளர்களுக்கு - பூசாறிகளுக்கு</u>

## <u>(இ.ம.இ.யின் அழைப்பு - அறிவிப்பு)</u>

இந்துமதத்தின் 48 வகையான கருவறை ஊழியர்களும் (பரம்பரை அறங்காவலர்கள், பூசாறிகள்) தங்களின் பாரம்பரிய இரகசியங்களைக் காலப்போக்கில் சிறுகச் சிறுக இழந்து அருள் நலமும், வளமும், செயலாற்றலும், சொல்லாற்றலும், ஆர்வமும், ... குன்றியவர்களாகி விட்டதால்தான் வடஆரியர்கள் சித்தர் நெறிதான் இந்துமதம் என்ற பேருண்மையை மூடி மறைத்து விட்டனர். இதனை முறியடிக்க 48 வகையான கருவறை ஊழியர்களும், பதினெண்சித்தர் பீடாதிபதியிடமும் அவரின் வாரிசுகளிடமும் ... காலங்கள் தோறும் பயிற்சிகளைப் பெற்றேயாக வேண்டும்! வேண்டும்! வேண்டும்!

தெய்வீக உலகத்திற்குப் பாலமாக இருந்து வரும் மருளாளி, அருளாளி, பூசாறிகளே மொழி, இன, நாட்டுப் பற்று மிக்கவர்களாக; மனிதகுல நன்மையில் ஈட்டம் கொண்டவர்களாக விளங்குகின்றனர். மீண்டும் சமுதாயத்தில் இவர்களுக்கு செல்வாக்கு கிடைத்தால்தான் தமிழினம் தன்னை உணரும்! தலைவனை அறியும்!

எனவே, இவர்கள் மீண்டும் பொலிவு பெற அருட்கலைகளில் தேர்ச்சியும், பயிற்சியும் தமிழ்மொழியில் பெற்றாக வேண்டும். அதற்கான பயிற்சிகளை முறையாகப் பெற **ஞாலகுரு சித்தர் கருவூரார்** அவர்கள் துவக்கியுள்ள <u>அருட்பணி விரிவாக்கத் திட்டத்</u>தில் இணைந்து செயலாற்ற வாருங்கள்!

**//உண்மை நகல்//**

**//இதன் மூலம்: 1984இல் அச்சிட்ட புத்தகம்.//**

# பதினெண்சித்தர் மடம்

(1) இவ்வுலகில் பொதுவாக எல்லா மதங்களிலும் மடங்கள் இருக்கின்றன. அதாவது, மத நிறுவன நிர்வாகங்களுக்காக அமைக்கப் படுகின்ற அலுவலகமே 'மடம்' என்று அழைக்கப் படுகின்றது. இம் மடத்தின் தலைவர் 'மடாதிபதி' என அழைக்கப் படுகிறார்.

(2) இப்படி மத அலுவலகமான மடத்தின் தலைவரான மடாதிபதி எனப்படுபவர் துறவியாகத்தான், அதாவது சாமியாராகத்தான் அல்லது சந்நியாசியாகத்தான், அதாவது இல்லற வாழ்க்கையை மறந்தவராக துறந்தவராகத்தான், அல்லது பெண்களை மறுப்பவராக வெறுப்பவராகத்தான் இருக்க வேண்டும் என்பதே பொதுவான நியதி, நீதி. இந்த நியதிக்கும், நீதிக்கும் அப்பாற்பட்ட நியதிகளையும், நீதிகளையும் உடைய மடம்தான் பதினெண்சித்தர் மடம். அதாவது, பதினெண்சித்தர் மடத்தின் மடாதிபதியாக இருப்பவர்கள் திருமணமானவர்களாக, அதிலும் குறிப்பாகக் குழந்தைகளைப் பெற்றெடுத்தவர்களாக, சிறந்த இல்லறம் நடத்துபவர்களாக இருக்க வேண்டும் என்பதுதான் பதினெண்சித்தர் மடத்தின் நியதி, நீதி, விதி.

(3) பொதுவாக மடம் என்றாலேயே ஆண்கள் மட்டும் இருக்கக் கூடிய நிறுவனம் என்றுதான் கூறப்படுகிறது, கருதப்படுகிறது. ஆனால், பதினெண்சித்தர் மடம் மட்டும்தான் **ஆண்களும், பெண்களும்** இருந்து மத நிறுவன நிர்வாகங்களை கவனித்தல்; ஆன்மீகக் கலைஞர்களை உருவாக்குதல், கோயில்களில் பூசை செய்தல், யாகம் செய்தல், கோயில் குடமுழுக்கு செய்தல், தீட்சை வழங்குதல், பூணூல் அணிவித்தல், உருத்திராக்கம்

அணிவித்தல், காப்புக் கயிறு, கங்கணக் கயிறு .... ...... ............. .................. ..*{மூல நகலில் ஒரு வரி தெரியவில்லை.}* நடைபெறுகிறது.

(4) இப்படி ஆண்களும் பெண்களும் இருந்து சமயப் பணிகளை, மதம் சார்ந்த சடங்குகளை, அருளுலகப் பயிற்சிகளை, ... நிகழ்த்துவதுதான், பதினெண்சித்தர் மடத்தின் சிறப்பான, தனிப்பட்ட, குறிப்பிடத் தக்க செயல்நிலையாகும்.

(5) பதினெண்சித்தர் மடம், இந்துமதத்தின் வேதமான இந்துவேதத்தைக் கற்றுக் கொடுக்கின்ற ஒரு நிறுவனமாகும். இதற்காக பதினெண்சித்தர் மடத்தில் திருகுலம், தருகுலம், கருகுலம், குருகுலம், ஆசிரமங்கள், அருட்பணி விரிவாக்கத் திட்ட மையங்கள், தெய்வீக மருத்துவ மையங்கள், இந்து வேதாகம பாடசாலைகள், தவப் பள்ளிகள், பத்திப் பாட்டைகள், சத்திச் சாலைகள், சித்திச் சோலைகள், முத்தி மன்றங்கள், ஞானக் கோட்டங்கள், ... முதலிய நாற்பத்தெட்டு (48) வகைப்பட்ட நிறுவனங்கள் இருக்கின்றன.

(6) பதினெண்சித்தர் மடத்தில் மட்டும்தான் இந்துவேதத்துக்குரிய செவித்தியார்கள், உருவேத்தியார்கள், உருத்தரர்கள், உருத்திரர்கள், உருத்திறர்கள், வேத ஐயர்கள், வேத கணபாடிகள், வேத ஓதிகள், ஓதுவார்கள், ஐயர்கள், வாத்தியார்கள், பண்டாரங்கள், வேத வித்துக்கள், வேத விற்பண்ணர்கள், வேத அத்தியாயணர்கள், வேத பாராயணர்கள், வேத உத்தியார்கள், வேத குருக்கள்கள், வேத குருமார்கள், வேத ஆச்சாரியார்கள், வேத சண்டிகள், வேத முண்டிகள், வேத உஞ்சி விருத்திகள், வேத சாஞ்சிகள், வேத காஞ்சிகள், வேத அத்திரிகள், வேத சாத்திரிகள், வேத சூத்திரிகள், வேத தோத்திரிகள், வேத நேத்திரிகள், வேத

வேத்திரிகள், ... எனப்படும் கலைஞர்கள் அனைவரும் உருவாக்கப் படுகிறார்கள்.

(7) இந்த உலகிலேயே பதினெண்சித்தர் மடம் மட்டும்தான் 'மதத்துக்குரிய வேதத்தை மட்டும் வளர்க்க, பரப்ப, பாதுகாக்க, மக்கள் பயன்படுத்திடும்படி செய்திட, ... தேவையான பணிகளை' செய்யும் பொறுப்பை மட்டும் தன்னிடம் வைத்துக் கொண்டிருக்கிறது. மற்றபடி மதத்துக்குரிய கோயில் நிர்வாகங்கள், மதத்துக்குத் தேவையான அருட் கலைஞர்கள், ஆய கலைஞர்கள், கோயில் பணியாளர்கள், கோயில் ஊழியக்காரரர்கள், கோயில் பூசாறிகள், அருட்சினையாளர்கள், குருக்கள்கள், குருமார்கள், ... முதலிய பல்வேறு வகையான கலைஞர்களை தயாரிக்கும் பொறுப்பையும்; அவர்களை வைத்து மதத்தை வளப்படுத்தி, வலிமைப்படுத்தி, பொலிவுபடுத்தி, ஆட்சிநிலைகளை மாட்சியோடு செழிச்சி பெற்று, விழிச்சி குன்றாமல் இருக்கும்படி செய்யும் பொறுப்பையும் பதினெண்சித்தர் பீடம் என்ற அமைப்பிடம், நிறுவனத்திடம் முழுமையாக ஒப்படைத்திருக்கிறது.

(8) அதாவது, <u>இந்த உலகிலேயே இந்துமதம் ஒன்றுதான் இந்துமதத்தின் வேதத்தை சேர்ந்த பணிகளுக்கு பதினெண்சித்தர் மடம் என்ற நிறுவனத்தையும், இந்து மதத்தைச் சேர்ந்த பணிகளுக்கு பதினெண்சித்தர் பீடம் என்ற நிறுவனத்தையும் பெற்றுத் திகழ்கிறது.</u> அதாவது, வேதம் வேறு, மதம் வேறு என்று இருபெரும் பிரிவுகளை உருவாக்கி செயல்படுவதுதான் இந்துமதத்தின் சிறப்பாகும். இருந்த போதிலும், பதினெண்சித்தர் மடத்தின் மடாதிபதியாக இருப்பவரே பதினெண்சித்தர் பீடத்தின் பீடாதிபதியாக இருப்பதுதான் மரபு, சட்டம், நியதி, நீதி, விதி ஆகும். எனவேதான்,

இந்துமதம் 43,73,096 (*1995இல்*) ஆண்டுக் காலமாக இருந்து வருகிறது, இம்மண்ணுலகில்.

(9) இந்துமதத்தில் பதினெண்சித்தர் மடத்தின் மடாதிபதி மட்டும்தான் 'இந்துவேத இந்துமத தலைமை ஆச்சாரிய குருபீடம், குருமகா சன்னிதானம், ஞாலகுரு, குவலய குருபீடம், அந்தணர் அண்ணல், ஞானாச்சாரியார்' என்று உரிமை பாராட்டி பெருமையாகச் செயல்படுகிறார்.

(10) இந்த **'பதினெண்சித்தர் மடம் மட்டும்தான் இம் மண்ணுலகு கடந்துள்ள ஆயிரத்து முன்னூற்று ஐம்பத்தொன்பது (1359) அண்ட பேரண்டங்களிலும் உள்ள பதினெண்சித்தர் மடங்களின் பதிலியாக அல்லது கிளையாக அல்லது இணைப்பாக அல்லது துணையாக செயல்படுகின்ற ஒன்று'** என்று உரிமை பாராட்டுகிறது.

(11) இந்த பதினெண்சித்தர் மடம் மட்டும்தான், இம்மண்ணுலகில் இன்றைக்கு 'கிறித்தவ ஆண்டு'க் கணக்குப் படி கி.பி.1995இலிருந்து 43,73,096 ஆண்டுகளுக்கு முன்பு தோற்றுவிக்கப் பட்ட ஒன்று. அதாவது, கடலுள் மறைந்த இளமுறியாக் கண்டம் எனும் ஏழாயிரம் (7000) கல் தொலைவுக்கு நீண்டு, விரிந்து, பரந்து கிடந்திட்ட முதல் பெருநிலப் பரப்பில் கிழக்கு இமயமலை, தெற்கு இமயமலை, மேற்கு இமயமலை என்று இருந்திட்ட மூன்று மலைகளின் அடிவாரத்தில் அல்லது மூன்று மலைகளின் மடியில் தோற்றுவிக்கப் பட்டிட்ட ஒன்றாகும் அல்லது பிறந்திட்ட ஒன்றாகும்.

(12) இந்த மடத்தை மனுநீதியார் எனப்படும் அனாதி சிவன் தோற்றுவித்தார். இவரை அடுத்து நூறாயிரக் கணக்கான அனாதிசிவன்களும், ஆதிசிவனாரும் அவரையடுத்து அவர் மகன் முருகனும், முருகனுக்கு இரண்டு திருமணங்களாகியும் குழந்தை இல்லாத காரணத்தினால்; முருகனை யடுத்து கருவூரார்களும்,

பதினெண்சித்தர்களில் ஒருவரான கருவூரார் ஒருவரும் இம்மடத்தின் மடாதிபதிகளாக இருந்து வருகிறார்கள்.

(13) இந்த பதினெண்சித்தர் மடம்தான் பதினெண்சித்தர்களின் தாய்மொழியும், அண்டபேரண்ட அருளுலக ஆட்சிமொழியும், வேதமொழியும், கடவுள்மொழியும், தேவமொழியும், தெய்வமொழியும், ஆண்டவர்மொழியும், திருமொழியும், தருமொழியும், கருமொழியும், குருமொழியும், அருள்மொழியும், மருள்மொழியும், பத்திமொழியும், சத்திமொழியும், சித்திமொழியும், முத்திமொழியுமான முத்தமிழ் மொழியில், மூத்த தமிழ் மொழியில், கன்னித் தமிழ் மொழியில் உள்ள மணுநீதி நூல்கள் பதினெட்டையும் (18), இந்துவேதங்கள் நான்கையும் (4), இந்துவேத நூல்களான முன்னூற்றுத் தொண்ணூற்றாறு (396) நூல்களையும், இந்துமத நூல்களான முப்பத்தாறு (36) நூல்களையும், மணுநீதியின் பதினெட்டு இலட்சம் ( 18,00,000 ) சுருதிகளையும், இந்துவேதத்தின் நான்கு இலட்சத்து நாற்பத்திரண்டாயிரத்து முன்னூற்று அறுபத்தெட்டு ( 4,42,368 ) சூலகங்கள் எனப்படும் சுலோகங்களையும், இந்துமதத்தின் ஓர் இலட்சத்து எழுபத்திரண்டாயிரத்து எண்ணூறு ( 1,72,800 ) கருத்துரைகளையும் முதல் யுகத்திலேயே எண்ணூறு ( 800 ) மொழிகளில் மொழி பெயர்த்திட்டது. இதற்காகவே, ‘முத்தமிழ்ச் சங்கம்’ என்ற ஒன்றை தோற்றுவித்து; வாழையடி வாழையாக வளர்த்து வருகிறது.

(14) இந்தப் பதினெண்சித்தர் மடம்தான் அண்ட பேரண்டத்திலிருந்து இம்மண்ணுலகத்தவர்களுக்காகக் கொண்டு வரப்பட்ட அருளாட்சி மொழியான முத்தமிழ் மொழியின் அனைத்து வகைப்பட்ட நூல்களையும் தொடர்ந்து இவ்வுலகில் உள்ள எல்லா மொழிகளிலும் மொழி பெயர்ப்பதற்கென்றே ஔவையார் தலைமையில்

(1) சிரசுவதி (சரசுவதி, கலைமகள்), (2) இலக்குமி (திருமகள், பொருள்மகள், பொருட்செல்வி), (3) காளி தேவி, (4) மாரி தேவி, (5) காமாட்சி தேவி, (6) பகலவதி தேவி (பகவதி தேவி) என்று ஆறு (6) பெண்களை உடைய **'இந்து வேத இந்து மத வளவளர்ச்சித் துறை'** என்ற ஒரு துறையை தோற்றுவித்திட்டது.

(15) அதாவது, பதினெண்சித்தர்களில் ஒன்பது (9) ஆண்களும், ஒன்பது (9) பெண்களுமாக பதினெண்சித்தர்கள் இருக்கிறார்கள் என்ற பேருண்மை பெண்ணின் பெருமையை பதினெண்சித்தர் மடம் பாதுகாக்கிறது என்பதை விளக்குகிறது.

(16) பதினெண்சித்தர் மடத்தில்தான் (1) திருமுறை வழிப் பூசை, (2) தருமுறை வழிப் பூசை, (3) கருமுறை வழிப் பூசை, (4) குருமுறை வழிப் பூசை என்று நான்கு (4) வகைப்பட்ட பூசைமுறைகள் கையாளப் படுகின்றன. அதாவது,

(1) **<u>திருமுறை</u>**:- எதுவும் படைக்காமல் கண்ணை மூடி, கையைக் கட்டி தவத்திலிருந்து பூசை செய்தல்;

(2) **<u>தருமுறை</u>**:- பயிரினங்களைச் சேர்ந்த காய்கறி, கனி, மலர், இலை, தண்டு, வேர், ... முதலியவைகளை படையல்களாகப் படைத்து பூசை செய்தல்;

(3) **<u>கருமுறை</u>**:- உயிரினங்களைச் சேர்ந்த நீர்வாழ்வன, நிலம் வாழ்வன எனப்படும் மீன் வகை, விலங்கினம், பறவை இனம் முதலியவைகளைப் படையல்களாக படைத்து பூசை செய்தல்.

(4) **<u>குருமுறை</u>**:- தான் குருவாக ஏற்றுக் கொண்டவருக்கோ அல்லது அவருடைய சமாதுக்கோ அல்லது அவரின்

பதிலியாக உள்ள ஓவியத்துக்கோ அல்லது சிலைக்கோ தொண்டு செய்தல் அல்லது பூசை செய்தல்.

- என்று இப்படி நான்கு (4) வகைப்பட்ட பூசைமுறைகளையும் பெற்றுத் திகழ்கிறது பதினெண்சித்தர் மடம்.

(17) இக்கட்டுரை சுருக்கமாக இருக்க வேண்டும் என்பதனால், விரிவஞ்சி பல செய்திகள் குறிக்கப் படவில்லை. இருந்த போதிலும், இந்த பதினெண்சித்தர் மடத்துக்கே உரிய ஒரு சிறப்பை இங்கு குறிப்பிட வேண்டியிருக்கிறது. அதாவது, இந்த பதினெண்சித்தர் மடம்தான்;

(1) மனிதர்களைக் கடவுளாக்குகின்ற பூசைமொழியை வழங்குகிறது.

(2) ஓமம், ஓகம், யாகம், யக்ஞம், வேள்வி எனும் 'ஐந்தீ வேட்டல்' முறையைக் கற்றுத் தருகிறது.

(3) கந்தழிநிலை வழிபாடு, வள்ளிநிலை வழிபாடு, கொடிநிலை வழிபாடு எனும் 'முத்தீ ஓம்பல்' முறையைக் கற்றுத் தருகிறது.

(4) பூசை நெறி, வழிபடு நெறி, வணங்கு நெறி, கும்பிடு நெறி எனும் நான்கு (4) வகைப்பட்ட நெறிகளைக் கற்றுத் தருகிறது.

(5) அழுகை முறை, தொழுகை முறை, எள்ளல் முறை, ஏசல் முறை எனும் நான்கு (4) வகைப்பட்ட முறைகளைக் கற்றுத் தருகிறது.

(6) அரற்றல் ஒழுகலாறு, பாடுகிடத்தல் ஒழுகலாறு, பரவுதல் ஒழுகலாறு, புலம்புதல் ஒழுகலாறு எனும் நான்கு (4) வகைப்பட்ட ஒழுகலாறுகளைக் கற்றுத் தருகிறது.

(7) நான்மறை மரபுகளை மிகுந்த பக்குவமுடையவர்களை மட்டும் தேர்ந்தெடுத்து கற்றுத் தருகிறது.

(8) இந்துமதத்தைச் செயல்படுத்தும் மடாதிபதி, பீடாதிபதி, சன்னிதானம், ஆதீனம், தம்பிரான், பண்டாரம், பண்டார சந்நதி, பண்டார சந்நிதி, ஆச்சாரியார், அரியவாள், கூரியவாள், சீரியவாள், நேரியவாள், பெரியவாள், வீரியவாள், ஏமகோடிப் பீடம், காமகோடிப் பீடம், சோமகோடிப் பீடம், வாமகோடிப் பீடம், கடவுளாச்சாரியார், தேவாச்சாரியார், தெய்வீகாச்சாரியார், ஆண்டவராச்சாரியார், அத்திரியார், சாத்திரியார், சூத்திரியார், தோத்திரியார், நேத்திரியார், வேத்திரியார், ஐந்தரத்தார், ஐந்திரத்தார், ஐந்திறத்தார், கணபாடி, பூசாறி, குருக்கள், குருமார், ... முதலியவர்களை எல்லாம் முறையான ஏட்டறிவின் மூலமும், பட்டறிவின் மூலமும் காலங்கள் தோறும் தயாரித்து வருகிறது.

எனவேதான், இந்த பதினெண்சித்தர் மடமே இந்துவேத, இந்துமத தலைமை ஆச்சாரிய குருபீடமாக இருந்து வருகிறது. இப் பதினெண்சித்தர் மடத்தின் மடாதிபதியான அந்தணர் அண்ணல், ஞானச்சாரியார், ஆதிசிவனாரின் நேரடி வாரிசு.

<u>நகல் தயாரிப்பு</u>:-

சித்தர் நான்வேதமுடையார் செல்வி லோகநாதன் கவிதா தேவி.

**//உண்மை நகல்//**

**//இதன் மூலநகல்: கையெழுத்துப் பிரதியாக இருந்தது.//**

# தஞ்சைப் பெரிய கோயிலைக் கட்டிய சித்தர் கருவூராரின் குருபாரம்பரியம்

## தமிழின மொழி மத விடுதலை

“... எத்தனைத் தமிழர்கள் தங்களைத் தமிழர் என்று சொல்லிக் கொள்ளும் தரம், திரம், திறம், உரம், மறம் பெற்றிருக்கிறார்கள்? ...”

“... எத்தனை யெத்தனை தமிழர்களுக்குத் தமிழ் நாட்டால் தாங்கள் தமிழர்களாக இருக்க நேரிட்டுள்ளதா? அல்லது, இனத்தின் பாரம்பரியத்தால் தாங்கள் தமிழர்களாக இருக்க நேரிட்டுள்ளதா? அல்லது மொழி வழிப் பெற்ற உரிமையாலும், பெருமையாலும் தாங்கள் தமிழர்களாக இருக்க நேரிட்டுள்ளதா? ... என்ற வினாக்களுக்கு விடை தெரியும்?!?!?!?! ....”

“... எத்தனைத் தமிழர்களுக்குத் தங்களை நெடுங்காலமாக மாற்றார்களும், வேற்றார்களும், அன்னியர்களுமே மறைமுகமாக ஆண்டு வருகிறார்கள் என்ற பேருண்மை விளக்கமாகி இருக்கிறது?!?!?! ...”

“... எத்தனைத் தமிழர்களுக்குத் தங்களுடைய சமுதாயம் சாதி மத வெறிகளால் குரங்கு கைப் பூமாலை போல் சிதைந்து சீரழிந்து உருக்குலைந்து கிடக்கிறது என்ற உண்மை புரிந்திருக்கிறது?!?!?! ...”

"... எத்தனை யெத்தனை தமிழர்களுக்குத் தங்களுடைய அரசியல் நெடுங்காலமாக அன்னியர்களுக்கு நேரடியாகவும், மறைமுகமாகவும் அடிமைப்பட்டுக் கப்பம் கட்டும் அவலநிலையைப் பெற்றிருக்கின்றது என்ற உண்மை புரிந்திருக்கிறது?!?!?! ..."

"... எத்தனை யெத்தனை தமிழர்களுக்குத் தங்களுடைய சமயமான பதினெண்சித்தர்களுடைய 'சித்தர் நெறி'யான 'சீவநெறி' எனப்படும் '**மெய்யான இந்துமதம்**' வேறு; இன்றைக்கு நாட்டில் உள்ள வேதமதக் கலப்புற்ற சமசுக்கிருத மொழி '*ஹிந்துமதம்*' வேறு என்ற தத்துவம் புரிந்திருக்கிறது?!?!?! ..."

"... எத்தனை யெத்தனை தமிழர்களுக்குத் தங்களுடைய மெய்யான பத்தியுணர்வு அன்னியர்களைக் குருவாக, ஆச்சாரியாராக, சாத்திரியாராக ஏற்றுத் தங்களை அடிமை வாழ்வு வாழச் செய்திடுகின்றது என்ற பேருண்மை புரிந்திருக்கிறது?!?!?! ..."

"... தமிழர்களில் ஏறத்தாழ எல்லோருமே சமயத்தின் பெயராலோ, அல்லது சமுதாயத்தின் பெயராலோ, அல்லது அரசியலின் பெயராலோ, அல்லது தங்களுடைய வயிற்றுப் பிழைப்பின் பெயராலோ; அன்னிய மொழிகளுக்கும், அன்னிய நாட்டார்களுக்கும் அடிமைகளாக, எடுபிடிகளாக, கூலிகளாக, வேலிகளாக வாழ நேரிட்டுள்ளது என்பதை எண்ணிப் பார்த்திட எத்தனைத் தமிழர்கள் தயாராக இருக்கிறார்கள்? அல்லது தயாராக்கப் பட்டிருக்கிறார்கள்? ..."

"... தமிழ்நாட்டின் அரசர்கள், அமைச்சர்கள், வேளிர்கள், வேளாளர்கள், தளபதிகள், பெருவணிகர்கள், தானாதிகாரிகள்,

புலவர்கள், கூத்தர்கள், நகைவேழம்பர்கள், ... எனப்படும் தலைவர்கள், வழித்துணைவர்கள், வழிகாட்டிகள் ... அனைவருமே ஏறத்தாழ தமிழ்மொழியின் அருமை பெருமைகளையும், அரிய பெரிய இலக்கிய இலக்கணங்களையும், சீரிய தத்துவங்களையும் சித்தாந்தங்களையும் பயன்படுத்தித்தான் தமிழின ஒற்றுமையை! ஒருமையை! உரிமையை! விடுதலையை! ... உருவாக்கிட வேண்டுமென்று முயன்றிருக்கிறார்கள்! அல்லது முயலுகிறார்கள்? ...”

“...ஆயிரமாயிரம் ஆண்டுகளாகத் தமிழ்நாட்டின் அரசியலார்கள் தங்கள் தங்களின் சொந்த நலனுக்காகத் தமிழின் நலத்தை, தமிழினத்தின் நலத்தை அவ்வப்போது அன்னியர்க்கு வேட்டைப் பொருளாகவும், காணிக்கையாகவும் ஆக்கிட்டனர். அதனால், தமிழுணர்வுக்கும், தமிழின உணர்வுக்கும் ஏற்பட்டு விட்ட சிதைவு, சீரழிவு, இழப்பு, ஒற்றுமையின்மை, ... முதலியவை என்றென்றுமே ஈடு செய்யப்பட முடியாதவைகளாகி விட்டன. அதாவது, தமிழக அரசியலில் இருந்தவர்கள், இருப்பவர்கள் எல்லோருமே பேராசையாலும், தன்னல வெறியாலும் ஒருவருக்கொருவர் போட்டி போட்டுக் கொண்டு தமிழுணர்வையும், தமிழின உணர்வையும், தமிழ் நாட்டுப் பற்றுணர்வையும் அன்னியர்க்கு விலைக்கு விற்கவும், விருந்தாக்கிடவும் முற்பட்டு விட்டார்கள். எனவே, இனிமேல் அன்னிய மொழிகளுக்கும், அன்னிய இனங்களுக்கும்தான் இந்நாட்டில் மதிப்பும், மரியாதையும், உரிமையும், பெருமையும் கிடைத்திடும்! ...”

“... தமிழ்நாட்டில் யாருமே தமிழர்களை ஒன்று திரட்டிட, ஒற்றுமைப் படுத்திட, ஒருமைப்பாட்டுடன் செயல்படச் செய்திட

மக்களிடையில் தமிழின உணர்ச்சியை வளர்க்க வேண்டுமா?; அல்லது தமிழ்மொழி உணர்ச்சியை வளர்க்க வேண்டுமா?; அல்லது தமிழரின் மத உணர்ச்சியை வளர்க்க வேண்டுமா?!?!?! ... என்று முறையான ஆய்வுகளை நிகழ்த்தி முடிவெடுக்கத் தயாராக இல்லை. இது குறித்துப் பட்டிமன்றங்கள் நிகழ்த்தினாலும் சமுதாயவாதிகளோ! சமயவாதிகளோ! அரசியல்வாதிகளோ! ஆர்வத்துடன் வருவதில்லை; வந்தாலும் மனம் திறந்து பேசுவதில்லை. பிறகு, எப்படித் தமிழர்களை ஒன்று திரட்டிட, ஒற்றுமைப் படுத்திட, ஒருமையுடன் செயல்படச் செய்திட முயலும் வாய்ச்சொல் வீரர்களாகத் தமிழ்நாட்டு அரசியலார்கள், சமுதாயத்தார்கள், மொழியார்கள் வாழுகிறார்கள் என்பதுதான் வியப்பையும், வேதனையையும் தருகிறது. இதற்குக் காரணமே ஏறத்தாழ நமது அரசியலார்கள், சமுதாயத்தார்கள், மொழி வெறியர்கள் தெரிந்தோ! தெரியாமலோ! அல்லது புரிந்தோ! புரியாமலோ! அன்னிய இனத்தார்க்கும், மொழியார்க்கும் கூலிகளாக, வேலிகளாக வாழுகிறார்கள். எனவே, இந்தப் போலிநிலைகளை அகற்ற முயலுவதுதான் மெய்யாகவே தமிழின மொழி அரசியல் துறைகளை உய்விக்கும். இதற்கு மதவழி உருவாக்கப் படும் விழிச்சி! எழிச்சி!! பயிற்சி!!! முயற்சி!!!! புரட்சி!!!!! முதலியவைதான் பயனளிக்கும்.

**தமிழின மொழி மத விடுதலைக்காகச் சிந்திப்பீர்!**

**செயல்பட வாரீர்! வாரீர்! வாரீர்!**

**பதினெண்சித்தர் மடம்.**

**GNT சாலை, காரனோடை, சென்னை-600067.**

# தஞ்சைப் பெரிய கோயிலைக் கட்டிய ஞானாச்சாரியார் சித்தர் கருவூரார் அருளியது.

1. "தமிழின மத உணர்வுகளே! தமிழின மொழியுணர்வுகளை வளர்க்கும்! வளப்படுத்தும்!! வலிமைப்படுத்தும்!!!"

2. "தமிழரின் மத எண்ணங்களே!; தமிழின மொழி எண்ணங்களை வளர்க்கும்! வளப்படுத்தும்!! வலிமைப்படுத்தும்!!!"

3. "தமிழரின் மதச் சிந்தனைகளே! தமிழின மொழிச் சிந்தனைகளை வளர்க்கும்! வளப்படுத்தும்!! வலிமைப்படுத்தும்!!!"

4. "தமிழரின் மதக் கருத்துக்களே!; தமிழின மொழிக் கருத்துக்களை விழிச்சி பெறச் செய்யும்! எழிச்சி பெறச் செய்யும்!! செழிச்சி பெறச் செய்யும்!!!"

5. "தமிழரின் மதத் தத்துவங்களே! தமிழின மொழித் தத்துவங்களை விழிச்சி பெறச் செய்யும்! எழிச்சி பெறச் செய்யும்!! செழிச்சி பெறச் செய்யும்!!!"

6. "தமிழரின் மதச் செயல் சித்தாந்தங்களே!; தமிழின மொழிச் செயல் சித்தாந்தங்களை விழிச்சி பெறச் செய்யும்! எழிச்சி பெறச் செய்யும்!! செழிச்சி பெறச் செய்யும்!!!"

7. "தமிழரின் மத வரலாற்றுப் பேருண்மைகளே!; தமிழின ஒற்றுமை முயற்சிக்கு வெற்றி தேடித் தரும்!"

8. "தமிழரின் மத இலக்கியச் செல்வமே! தமிழின மொழி ஒருமைப் பாட்டு முயற்சிக்குச் சிறந்த வழியாக! வழிகாட்டியாக!! வழித்துணையாக!!! வழிப்பயனாக இருக்கிறது!"

9. "தமிழரின் மதக் கொள்கையும் குறிக்கோளுமே!; தமிழின மொழி உரிமைகளையும் பெருமைகளையும் போற்றிப் பேணிப் பாதுகாத்து வளர்த்து வருகின்றன."

10. "தமிழரின் மத நம்பிக்கையும் கோட்பாடுமே!; தமிழின மொழி விடுதலையுணர்வை உயிரும் உயர்வுமுடையதாகக் காத்து வருகின்றன."

11. "தமிழரின் மத விடுதலையே!; தமிழின மொழி விடுதலையை உருவாக்கிடும்."

12. "தமிழரால் தங்களின் மதத்தை மறுத்தோ! வெறுத்தோ! அன்றி மறந்தோ! துறந்தோ! புறக்கணித்தோ! தங்களுக்குத் தேவையான தமிழின மொழி விடுதலையைப் பெற முடியாது!"

தொடர்பு:-

சித்தர் கருவூரர் குண்டலினி மையம், சென்னை-600101.

**//உண்மை நகல்//**

**//மூலம்: 1988இல் அச்சிட்ட அறிவிக்கை.//**

# சமத்துவ சகோதரத் தத்துவப் பொதுவுடமை கூட்டுறவுச் சமுதாயம் அமைப்போம் வாரீர்!

கால் தடுக்கி நான் விழுந்தால் கன்னித் தமிழ் அரவணைக்கட்டும்!
குறைகள் இருந்திட்டால் கோபுரங்கள் மன்னிக்கட்டும்!
குப்பைகள் உணர்ச்சி பெற்றிடட்டும்!
ஆதவன் வானில் தவழ்ந்து வந்தால் தாமரை மலர்கள் மலராதோ?
நிலவுப் பெண் நடந்து வந்தால் அல்லிப் பூக்கள் சிரிக்காதோ?
தமிழ்த் தாய் என் நாவில் நடம் பயின்றுல்
நல் முத்தாய் கவிதைகள் உதிராதோ?
நான் கற்பனை வானில் மிதந்து வரக்
கட்டிக் கரும்பே உதவிடுவாய்!
மல்லிகையின் மணம் மறையலாம்,
தங்கத்தின் தரம் குறையலாம்,
செந்தமிழே! உன் புகழ் குன்றுமோ?

பருவப் பெண்களின் வாழ்க்கை இந்நாளில்
மாட்டுச் சந்தை வியாபாரம்;
மாடுகள் வாங்க வருவோரை ஓடஓட
விரட்டிட்டு, இளைஞர் நாமே முன்வந்து
வரதட்சணை யில்லாத் திருமணம் புரிந்திடுவோம்.
கலப்பு மணத்துக்கு வகை செய்யும்
காதலை வாழ்த்திப் போற்றிடுவோம்.
காதல் தலைவன் மறைந்து விட்டால்
கன்னிப் பூக்கள் மணம் வீசா;- அக்
கன்னிப் பூக்கள் மணம் வீச விதவை மறுமணம் புரிந்திடுக
எனும் அரசின் திட்டம் மேலோங்க நாமும்

வழிவகை செய்திடுவோம்!
பாரதி கண்ட புதுமைப் பெண்கள்
பாரினில் தோன்றிட வழி செய்வோம்.
பாலைவனமாம் பெண்களின் வாழ்க்கையை
நந்தவனமாய் மாற்றிடுவோம்.

உழைப்பில் இரத்தம் வியர்வையாக ஓட
உழைத்து உழைத்து ஓடாய்ப் போன
உழவர்களுக்கு உணவளிப்போம்.
பதுக்கல், கலக்கல், சுரண்டுவோரின்
தம் கைகளை விறகு கட்டையாக மாற்றினால்
ஏழைகள் வீட்டில் புகையாதோ?
சாகுபடி செய்வோரை சாகும்படி விடாமல்
தடுத்து நிறுத்திக் காப்போம்.
பசியென வந்தோர்க்கு பால் தருவோம்.
கூழெனத் துடிப்போர்க்கு சோறிடுவோம்.
ஊழல் மிகுந்த தலைவர்களை ஊரை விட்டே விரட்டிடுவோம்.
பசி, பட்டினி, பகைமை, போட்டி, பொறாமை,
தீண்டாமை, சாதி சமயச் சண்டைகள்
யாவும் ஒழிந்திட, அழிந்திட, இந்தியாவில்
மறுமலர்ச்சி ஏற்பட அமைப்போம்,
சமத்துவ சகோதரத் தத்துவப் பொதுவுடமை கூட்டுறவுச் சமுதாயம்.
வாரீர்! வாரீர்!! வாரீர்!!! வாரீர்!!!!

இவண்,
ஏ.ரவி.
9.2.1983.

**//உண்மை நகல்//**

**//இதன் மூலநகல்: கும்மிடிப்பூண்டி சித்தரடியார் திரு ஏ.இரவி அவர்களின் கையெழுத்தில் அவருடைய குறிப்பேட்டில் இருந்தது.//**

# பதினெண்சித்தர் பீடாதிபதிகளின் கருவாசகம்

"தமிழ் உள்ள வரைதான் தமிழினம் இருக்கும்";
"தமிழ் வளர்ந்தால்தான் தமிழினம் போற்றப்படும்";
"தமிழ் மதிக்கப் பட்டால்தான் தமிழர் மதிக்கப் படுவர்";
"தமிழ் மறுமலர்ச்சி பெற்றால்தான் தமிழர்கள் மறுமலர்ச்சி பெறுவார்கள்";
"தமிழ் ஆட்சியுரிமை பெற்றால்தான் தமிழர்கள் ஆட்சியுரிமை பெறுவார்கள்";
"தமிழ் செழித்தால்தான் தமிழர்கள் செழிப்படைவார்கள்";
"தமிழ் உயர்வு பெற்றால்தான் தமிழர்கள் உயர்வு பெறுவார்கள்";
"தமிழிலேயே எல்லாக் கலைகளும் கற்பிக்கப் பட்டால்தான் தமிழர்கள் எல்லாக் கலைகளிலும் வல்லவர்களாக முடியும்";
"தமிழ் மொழியிடம் பற்று ஏற்பட்டால்தான் தமிழர்களுக்கிடையில் ஒற்றுமை ஏற்படும்";
"தமிழ் மொழியிடம் விருப்பம் ஏற்பட்டால்தான் தமிழர் பண்பாடும் நாகரீகமும் உருக் குலையாமல் இருக்கும்";
"தமிழ் வாழ்ந்தால்தான் தமிழர் வாழ முடியும்";
"தமிழை வாழ வைப்பதே தமிழரை வாழ வைப்பதாகும்":
"தமிழின வரலாறே தமிழரின் வரலாறு";
"தமிழின் வளமே தமிழரின் வளம்";
"தமிழைக் காப்பதே தமிழரைக் காப்பது";
"தமிழை வளர்ப்பதே தமிழரை வளர்ப்பது"; ... ... ...
"தமிழே கடவுள்"; "தமிழே அமிழ்து"; "தமிழே உயிர்" ...

- கருவாசகம்.

*//குருதேவர் எழுதியருளிய 'எந்த மானுடம் இந்த மானுடம்' என்ற நூலின் அறிமுகவுரையிலிருந்து எடுக்கப் பட்ட வாசகங்கள்.//*



"... இம்மண்ணுலக அருளாளர் வரிசையிலேயே முதன்முதல் அரசயோகத்தைத் துவக்கி மிகப்பெரிய வெற்றி நிலைக்குரிய சாதனை நிலையைத் தோற்றுவித்தவரும்; கருவறைக் கோபுரமுடைய **தஞ்சைப் பெரிய கோயிலைக் கட்டியவருமான பதினோராவது பதினெண்சித்தர் பீடாதிபதி, குருமகா சன்னிதானம், ஞாலகுரு சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூரார் அவர்களே** போர்க்கோலம் பூண்டு, படை நடத்தி, வேலோச்சியும், வாள் வீசியும், அத்திறங்கள் எய்தும், குருதியாறு ஓடவிட்டும்தான் 'இந்து மறுமலர்ச்சி இயக்கம்' வெற்றி பெறுமாறு செய்தார். ... ..."

இவருக்கு அடுத்து 900 ஆண்டுகள் கழித்துப் 12வது பதினெண்சித்தர் பீடாதிபதியாகத் திருத்தோற்றம் எடுத்த ஞானாச்சாரியார் **ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரார்** அவர்களின் குருவாணைப் படி இந்துவேத இலக்கியங்கள் இதில் வெளியிடப் படுகின்றன. இவை **ஞாலகுரு** அவர்கள் அமைத்திட்ட கையெழுத்துப் பிறதி நூலகங்களில் உள்ள, எழுத்து மங்கிக் கொண்டிருக்கும் நகல்களின் பிறதிகளாக வழங்கப் படுகின்றன.



அம்மையப்பர்

---

Published under the Divine Grace of His Holiness the 12th Pathinensiddhar Peedam, Gurudevar, Gnaalaguru Siddhar Arasayogi Karuvooraar by the **Anaathi Sankaraachaariyaar Peedam** Trust, (Regd) East Tambaram, Chennai.
Printed by Mr Sivaraman, Kamarajarpuram, East Tambaram. Cell: 09972130609. at Sri Vignesh Printers, Madurai.

www.newsletters.gurudevar.org www.gurudevar.org
www.induism.org *Email:* indhuism@gmail.com

www.books.gurudevar.org